1970 மார்ச் 5]

கிருஷ்ணம்பேட்டை தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள்

*215 வினா—திரு. எம். பூபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, கிருஷ்ணம்பேட்டை, நடேசன் தெருவில் 10—3—1969-ம் தேதி நேர்ந்த பயங்கர தீ விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பாதிக்கப்பட்ட குடும்பங்கள்—307.

திரு. எம். பூபதி : பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பங்களுக்கு தீப் பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? எவ்வளவு பேர்களுக்கு எந்த அளவிற்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : பாதிக்கப்பட்ட 307 குடும்பங்களில் 89 பேர்கள் அந்தக் குடிசைகளுக்குச் சொந்தக்காரர்கள். மீதியுள்ளவர்கள் அங்கு குடியிருந்தவர்கள். குடிசைச் சொந்தக்காரர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் 80 ரூபாயும், முதல் அமைச்சர் அவர்களின் நகர தீ விபத்து நிதியிலிருந்து 120 ரூபாயும் ஆக ரூ. 200 வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு துணிமணிகள் வாங்குவதற்காக உதவித் தொகை கொடுக்கப்பட்டது. இதல்லாமல் சென்னை குதிரைப் பந்தயத்தார் அவர்களாக மனமுவந்து அளித்த ரூ. 10,001-ஐக் கொண்டு கலெக்டர் அவர்கள் மூலம் கைத்தறி ஆடைகள் வாங்க வழங்கப்பட்டது.

Loans for potato cultivation

*216 Q.—Thiru B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether there is anw proposal to increase the potato loan from Rs. 400 to Rs. 900 per acre under the Potato schemes introduced at Hosur and Kodaikanal; and

(b) if so, when it will be implemented?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கோடைக்கானல் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மட்டுமே கடன் வழங்கப்பட்டு வருவதால், கோடைக்கானல் பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிடுவதை மேம்படுத்துவதற்காகத் தற்போது ஏக்கருக்கு ரூ. 800 என்னும் வீதத்தில் குறுகிய காலக் கடன்கள் கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்டு வருகின்றன. ஓசூர் பகுதியில் துறைவாரியாக ஏக்கருக்கு ரூ. 400 என்ற வீதத்தில் வழங்கப்பட்டு வருகிற கடன் தொகை 17—7—1969 முதல் ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டுள்ளது எனினும், கடன் தொகையை ரூ. 900-க்கு உயர்த்துவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.

THIRU B. VENKATASWAMY : Is the Hon. Minister aware of the fact that potato cultivation is considerably affected in Ooty due to diseases of Nematode and Late Blight? Is the Hon. Minister also aware of the fact that there is great potentiality to bring more lands under potato cultivation in Hosur taluk and Kodaikanal? Will the Government come forward to introduce 'package schemes' to augment potato cultivation in such areas, especially in Hosur?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹோசூர் தாலுக்காவில் பாக்கேஜ் திட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு இப்போது இல்லை. இருந்தாலும் அங்கு அரசாங்க இலாகா மூலம் ஏற்கனவே ரூ. 400 தான் கொடுக்கப்படவேண்டுமென்று முடிவு எடுத்திருந்தாலும் விவசாயத் துறை இயக்குநர் ஹோசூரில் இருப்பவர்கள் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பவர்கள், ஏழைகள் என்பதால் தனி அக்கறை காட்டவேண்டும் என்று ரூ. 400 என்பது ரூ. 750 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. நீலகிரியில் நெமடோட் உருளைக்கிழங்குப் பயிரை நாசம் செய்துவருகிறது என்று தனியாக அங்குள்ள இந்தோ ஜெர்மன் திட்டக்காரர்கள் அதற்காக முயற்சிகள் எடுத்துவருகிறார்கள். நீலகிரியைப் பற்றித் தனியாக விவரம் இல்லை. ஹோசூரில் உருளைக்கிழங்கிற்கு பாக்கேஜ் திட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு தற்போது இல்லை.

திரு. ஆர். விஜய ரகுநாத தொண்டமான் : இந்த லேட் பிளைட் போன்ற வியாதிகள் அதிகமாக வருவதால் விவசாயம் செய்யக் கூடிய செலவு அதிகமாகக் கொண்டு போகிறது. ஆகவே இதற்காக அரசாங்கம் இப்போது கொடுக்கக்கூடியதை, ரூ. 200-லிருந்து ஏதாவது கூட்டி லோன் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நீலகிரியில்தான் இந்த லேட் ப்ளைட் என்ற வியாதி உருளைக்கிழங்குக்கு இருக்கிறது. ஆனால் பொதுவாக உருளைக்கிழங்கு சாகுபடிக்காக அரசாங்கம் விதைகளுக்கு ரூ. 350-ம், உரத்திற்கு 350-ம், பெஸ்டிசைட்ஸ்க்காக ரூ. 50 பயிரிடும் செலவுக்கு ரொக்கம் ரூ. 150 என்று இப்படி யெல்லாம் கொடுப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டு கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் அந்தக் கடன்களைக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். பல சொசைட்டிகள் திருப்பித் தராத காரணத்தால் அதிக தேக்கம் சென்ட்ரல் பாங்கில் இருப்பதால் இவ்வளவு தொகையும் கொடுக்கமுடியாது என்று பாங்க் மறுப்பு தெரிவித்திருந்தார்கள். இப்போது தற்சமயம் நிலைமை சிறிது சரியாகியிருப்பதால் ரூ. 800 வரை இன்று கொடுக்கப்பட்டு வருகிறது.

THIRU B. VENKATASWAMY : According to the answer given by the Hon. Minister there is no such 'package scheme' to be introduced in Hosur taluk; may I know from the Hon. Minister that there is large potentiality and the ryots are able to produce as much as 10,000 Kg. per acre? In view of this may I know from the Hon. Minister, considering the backwardness of that area, to introduce the 'package scheme' at an early date?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது அவசியம் இருந்தால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to Hosur Taluk, there has been a chronic drought for the last five years. In view of this, will the Hon. Minister be pleased to consider the grant of some subsidy to help the suffering ryots there in addition to the grant of loans?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மானியம் கொடுப்பதற்கு இப்போது எந்தவிதமான திட்டமும் இல்லை. அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி, அங்கு ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள் என்பதால் தான் ஏற்கெனவே அரசாங்கம், 400 ரூபாய் கொடுத்தால் போதும் என்று முடிவெடுத்திருந்தது. அது விவசாயத் துறை இயக்குநர் அவர்களால் 750 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. மிகவும் பின்தங்கிய பகுதி. அவர்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே தான் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (■) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

(2) நடைமுறைக் கேள்வி.

ஓர் உறுப்பினரின் வினாக்கள் வினாப்பட்டியலில் இடம் பெறுவது குறித்து

■ திரு. பி. எஸ். தனுஷ்கோடி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். தலைவர் அவர்களே, கடந்த 3 வருஷ காலமாக, என்னுடைய பெயரில் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விகளை ஒவ்வொரு சட்டமன்றக் கூட்டமும் முடிந்த பிறகு புதுப்பிக்க வேண்டுமென்று நான் எழுத்து மூலமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். தங்கள் மூலமாகவும் தனியாகக் கடிதம் கொடுத்திருக்கிறேன். இதுவரையில் என்னுடைய கேள்விகள் இடம் பெறவில்லை. குறிப்பிட்டவர்களுடைய கேள்விகள் மட்டும் இடம் பெறுகின்றன. தனி ஏற்பாடு இருக்கிறதா? தாங்கள் இதற்குத் தீர்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. கேள்வி கொடுத்து வரவில்லை என்று சொல்லுகிறார்கள். திரு. தனுஷ்கோடி அவர்கள் கொடுத்திருக்கும் கேள்விகள் 7. 2 கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 5 கேள்விகள் மீண்